Kerala Gazette No. 33 dated 18th August, 2020.
**PART I** **Section iii**

**கேரள அரசு**

சட்ட (சட்டமியற்றல்-ஐ) துறை

அறிக்கை

எண் 5931/ச. இ. ஐ. 2/2018/சட்டம்.

2017 மார்ச் 3
திருவனந்தபுரம், 1193 மீனம் 17
1940 சைத்ரம் 10.

கேரள மாநில சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டம் பொதுத்தகவலுக்கென இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2018 மார்ச் 31-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி,

பி. ஜி. ஹரீந்திரநாத்,
*சட்டத்துறை செயலாளர்.*

2018-ன் சட்டம் எண் 9

## 2018-ன் கேரள சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான (திருத்த) சட்டம்

1976-ன் கேரள சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான சட்டத்தை மீண்டும் திருத்தம் செய்வதற்கான ஒரு சட்டம்.

முகவுரை.—1976-ன் கேரள சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான சட்டத்தை பின்வரும் தேவைகளுக்காக மீண்டும் திருத்தம் செய்வது உகந்ததாக இருப்பதனால்;

இந்தியக்குடியரசின் அறுபத்து ஒன்பதாம் ஆண்டில் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது.

1. சுருக்கப்பெயரும் தொடக்கமும்.—(1) இந்த சட்டம் 2018-ன் கேரள சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான (திருத்த) சட்டம் என்று அழைக்கப்படலாம்.

(2) இது 2018 ஏப்ரல் 1-ஆம் தேதி அமலுக்கு வருவதாகும்.

2. பிரிவு 2பி-ல் திருத்தம்.—1976-ன் கேரள சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான சட்டத்தின் (1976-ன் 46) பிரிவு 2பி-ல் (இதன் பிறகு முதன்மை சட்டம் எனக் குறிப்பிடப்படும்) துணைப்பிரிவு (1)-ல், ‘‘இருபத்தி நான்காயிரம் ரூபாய்’’ என்னும் வார்த்தைகளுக்குப் பதிலாக ‘‘எழுபத்தி ஐந்தாயிரம் ரூபாய்’’ என்று சேர்க்கப்பட வேண்டும்.

3. பட்டியலில் திருத்தம்.—முதன்மைச் சட்டத்தில் தற்போதுள்ள உள்ள பட்டியல் மற்றும் விதிகளுக்குப் பதிலாக, பின்வரும் பட்டியல் மற்றும் விதிகள் சேர்க்கப்பட வேண்டும், அதாவது,-

‘‘பட்டியல்

[பிரிவு 2(1)-ஐ காண்க]

ஓய்வூதிய வீதம்

| காலயளவு | ஒவ்வொரு மாதத்திற்கான ஓய்வூதியம் வீதம் |
|---|---|
| இரண்டாண்டிற்கு குறைவான காலயளவில் | 8,000 |
| மொத்தம் இரண்டாண்டுகள் | 8,000 |
| மொத்தம் மூன்றாண்டுகள் | 12,000 |
| மொத்தம் நான்காண்டுகள் | 16,000 |
| மொத்தம் ஐந்தாண்டுகள் | 20,000 |

பிரிவு 2-ன் துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிட்டபடி ஐந்தாண்டுகளுக்கும் அதிகமான காலயளவில் ஏதேனும் ஒருவர் உறுப்பினராக சேவை செய்திருந்தால், ஐந்தாண்டுகளுக்குக் கூடுதலான ஒவ்வொரு ஆண்டிற்கும் ஆயிரம் ரூபாய் என்ற முறையில் ஒவ்வொரு மாதமும் கூடுதல் ஓய்வூதியமாக அவருக்கு அளிக்கப்படவேண்டும்.

ஓய்வூதியத்திற்குத் தகுதியான காலயளவை மொத்தமாகக் கணக்கிடும்போது, பின்னங்களாக உள்ள அரையாண்டுகள் மற்றும் அதற்கும் அதிக கால அளவு அடுத்த முழு ஆண்டாக கணக்கிடப்பட வேண்டும்.

முன்னாள் உறுப்பினர்கள் எழுபது வயதை பூர்த்தி செய்யும் பொருட்டு கூடுதல் ஓய்வூதியமாக ஒவ்வொரு மாதமும் மூவாயிரம் ரூபாய் வழங்கவும், எண்பது வயதை பூர்த்தி செய்பவர்களுக்கு மூவாயிரம் மற்றும் ஐந்தாயிரம் ரூபாய் என்ற முறையில் ஒவ்வொரு மாதமும் அளிக்கப்பட வேண்டும்.

இந்த சட்டத்தின்கீழ் தகுதியுடைய ஒரு உறுப்பினருக்குக் கிடைக்கப்பெறும் அதிகபட்ச ஓய்வூதியம் என்பது மாதம் தோறும் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேலாகாமல் இருக்கவேண்டும்.